## திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் என்பது பொதுவாக, வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையில் பணத்தொகையினை விரிவுபடுத்தும் அல்லது சுருக்கும் பொருட்டு திறந்த சந்தையில் தற்காலிக அடிப்படையில் அல்லது நிரந்தர அடிப்படையில் நிதியியல் சொத்துக்களை வாங்குவதனை அல்லது விற்பதனைக் குறிக்கின்றது. திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ், இலங்கை மத்திய வங்கி, தேவையான மட்டத்திற்கு அழைப்பு வீதத்தினை வழிப்படுத்தும் விதத்தில், விடயத்தினைப் பொறுத்து ஒன்றில் சந்தைக்கு திரவத்தன்மையினை உட்புகுத்தலாம் அல்லது சந்தையிலிருந்து திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்ளலாம். பிணையங்களை கொள்வனவு செய்வது வங்கித்தொழில் முறைமைக்குள் பணத்தினை உள்ளீடு செய்கின்ற வேளையில் பிணையங்களை விற்பனை செய்வது அதற்கு எதிர்மாறானதாக அமையும். நாணயவிதிச் சட்டத்தின் 91ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கி திறந்த சந்தையில் அரச பிணையங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்கிறது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது பின்வரும் படிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

அ) ஓரிரவு திரவத்தன்மை மிகை/ குறை எதிர்வுகூறப்படுகின்றது.

ஆ) ஏலத்தினை நடத்துவதா என்பது பற்றியும் அவ்வாறு நடத்துமிடத்து அதன் வகை, அளவு மற்றும் முதிர்ச்சி பற்றி தீர்மானிப்பதற்காக நாளாந்த நாணயத் தொழிற்பாட்டு குழுவின் கூட்டத்தில் பங்கேற்றல்.

இ) இலத்திரனியல் விலைக் குறிப்பீட்டு முறைமையினூடாக நாணயத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானம் பற்றி சந்தைக்கு அறிவித்தல்

ஈ) ஏலம் நடத்தப்படுமிடத்து பங்கேற்கின்ற நிறுவனங்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல்

உ) ஏலத்தின் பெறுபேறுகள் மீது நாணயத் தொழிற்பாட்டு குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்படுதல்.

ஊ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவர்களது மேலதிக திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள துணைநில் வசதிகளைப் பயன்படுத்தச் செய்தல்.

### 1.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் பயன்படுத்தப்படும் சாதனங்கள்

முக்கியமாக மூன்று வகையான திறந்த சந்தை ஏலங்கள் காணப்படுகின்றன. அதாவது, மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள், திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்கு/ விற்பனை செய்வதற்கான உடனடி ஏலங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள். ஏலங்கள் பெருக்க முறையிலான விலைக்குறிப்பீடுகளாகவும் பெருக்க விலைமுறைகளிலும் காணப்படுகின்றன. பணச் சந்தையின் பங்கேற்பாளர்கள் ஒவ்வொரு குறுங்கால ஏலங்களிலும் மூன்று விலைக்குறிப்பீடுகளையும் ஒவ்வொரு நீண்டகால ஏலங்களிலும் ஆறு விலைக்குறிப்பீடுகளையும் சமர்ப்பிக்கமுடியும் என்பதுடன் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளர்கள் தொடர்பான ஏலங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதங்களில் தமது கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்வர்.

### அ) மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

இவை ஒன்றில் சந்தைக்கு திரவத்தன்மையினை தற்காலிகமாக உள்ளீடு செய்வதற்காக அல்லது ஈர்த்துக்கொள்வதற்காக நடத்தப்படுகின்றன. சந்தைத் திரவத்தன்மை மிகையாகக் காணப்படுமிடத்து

அம்மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்காக மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்படுகின்றன அல்லது நேர்மாறாக இடம் பெறுகின்றது. ஏலமானது பெருக்க முறையிலான விலைக்குறிப்பீடாக, பெருக்க விலை முறைமையிலானதாக இருக்கிறது. ஏலத்தொகையானது, ஒட்டு மொத்த திரவத்தன்மை மிகை அல்லது பற்றாக்குறை, அப்பொழுது நிலவுகின்ற வட்டி வீதம் அதேபோன்று நாட்டின் பேரண்டப் பொருளாதார சூழல் என்பனவற்றில் தங்கியிருக்கின்றது. ஏலத்தின் காலமும் சந்தைத் திரவத்தன்மையின் கிடைப்பனவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இவற்றினை மேற்கொள்ளும் விதத்தில் இவ்வேலங்களின்கீழ், இலங்கை மத்திய வங்கி இணங்கப்பட்ட எண்ணிக்கையினைக் கொண்ட நாட்களின் பின்னர் கொடுக்கல்வாங்கல்கள் திரும்பல் செய்யப்படும் என்ற உடன்படிக்கையுடன் தற்காலிக அடிப்படையில் அரச பிணையங்களை ஒன்றில் விற்பனை (மீள்கொள்வனவு)/ கொள்வனவு (நேர்மாற்று மீள்கொள்வனவு) செய்கிறது.

மீள்கொள்வனவு ஏலங்கை பொறுத்தவரையில், இலங்கை மத்திய வங்கியின் சொத்துப்பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல் இருப்புக்கள் போதுமானதாக இல்லாதவிடத்து, இலங்கை மத்திய வங்கி அதன் இரண்டு தேர்வுகளான இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் என அழைக்கப்படும் அதன் சொத்துப் பிணையங்களை வழங்கும் அல்லது முறிக் கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுக்கும். முறி கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேம நிதியம் போன்ற பாரிய ஆர்வலர்களிடமிருந்து தற்காலிகமாக முறிகளைக் கடன்படும். ஏலங்களின் முதிர்ச்சி 1 - 7 நாட்களாக இருக்குமிடத்து அக்காலம் குறுங்காலம் எனப்படும். ஏலத்தின் முதிர்ச்சி 7 நாட்களுக்கு கூடுதலாகவும் ஆனால் 90 நாட்களிற்கு குறைவாகவும் இருக்குமிடத்து அவை நீண்டகால ஏலங்கள் என அழைக்கப்படும்.

**ஆ) உடனடி ஏலங்கள்**

இவை நீண்டகால திரவத்தன்மைப் பற்றாக்குறையினை/ மிகையினைக் கட்டுப்படுத்துவதற்காக நடத்தப்படுகின்றதுடன் இதனடிப்படையில் திரவத்தன்மை நிரந்தர அடிப்படையில் உள்ளீடு செய்யப்படுகின்றது அல்லது ஈர்த்துக்கொள்ளப்படுகின்றது. சந்தைத் திரவத்தன்மை ஒப்பீட்டு ரீதியில் பாரிய மிகையைக் கொண்டதாகவும் நீண்டகாலம் தொடர்ச்சியாகக் காணப்படும் போன்று இருக்குமிடத்து நாணயத் தொழிற்பாட்டுக்குழு, திரவத்தன்மையினை நிரந்தரமாக ஈர்த்துக்கொள்ளும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் உடமைகளிலிருந்து இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணையங்களை உடனடியாக விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கும். இதேபோன்று நீண்டகால திரவத்தன்மைப் பற்றாக்குறை இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணைங்களை கொள்வனவு செய்வதன் மூலம் அகற்றப்படும்.

**வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள்**

வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர மாற்றல்கள் என்பது எதிர்கால திகதியொன்றில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கல்வாங்கல் திரும்பல் செய்யப்படும் என்ற உடன்படிக்கையுடன் ஆரம்ப திகதியொன்றில் ஒரு நாணயத்தினை மற்றொரு நாணயத்திற்கெதிராக கொள்வனவு செய்வதுடன் தொடர்பானதாகும். வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல், மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கலை ஒத்ததேயாகும். இங்கு, பிணையொன்றின் பிணை முறிக்குப் பதிலாக வெளிநாட்டு நாணயம் காணப்படுகிறது. முதல் பிரிவில் பரஸ்பர பரிமாற்றல்களின் வாங்கல் - விற்றல், சந்தைக்கு ரூபாவினை உள்ளீடு செய்வதுடன் பரஸ்பர பரிமாற்றல்களின் விற்றல் - வாங்கல், சந்தையிலிருந்து திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்கிறது. இரண்டாவது பிரிவில் இது நேர்மாறாக இடம்பெறும்.